**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**
**அறிக்கை – 6.5.2013**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் முதன்மைத் தொழிலாகவும், ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாகவும், கிராமப்புற மக்களின் வாழ்வுக்கு ஆதாரமாகவும் விளங்குகின்ற வேளாண் தொழிலை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

நான் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் வேளாண் உற்பத்தியை பெருக்குவதற்காக எடுத்த நடவடிக்கைகள் காரணமாக, உணவு தானிய உற்பத்தி 2011–12 ஆம் ஆண்டில் 100 லட்சம் டன் என்ற அளவினையும் கடந்து சாதனை படைத்தது. 10 லட்சம் முதல் 100 லட்சம் மெட்ரிக் டன் வரை உற்பத்தி உள்ள மாநிலங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ள மாநிலங்களிடையே உணவு தானிய உற்பத்தியில் தமிழகம் முதலிடத்தை பெற்றது. இதற்காக ‘‘கிரிஷி கர்மான் விருதும்’’ 2 கோடி ரூபாய் பரிசும் தமிழகத்திற்கு கிடைத்தது என்பதை இங்கு பெருமையுடன் நினைவுகூர விரும்புகிறேன்.

2012–13 ஆம் ஆண்டில், பருவமழை பொய்த்து, கர்நாடகம் வஞ்சித்த நிலையிலும், சாகுபடி பாதிப்பை குறைக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எனது அரசால் எடுக்கப்பட்டன. இந்தியாவிலேயே முதன் முறையாக வறட்சி காரணமாக 50 விழுக்காட்டிற்கு மேல் பயிர் பாதிப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், போதிய மழை இல்லாத காலங்களிலும் பயிர்களுக்கு நீர் கிடைக்க வகை செய்யும் வகையில், டெல்டா மாவட்டங்களில் 15,000 பண்ணைக் குட்டைகளும், இதர மாவட்டங்களில் 55,000 பண்ணைக் குட்டைகளும் அமைக்கப்படும் என நான் அறிவித்துள்ளதன் அடிப்படையில் தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் கிடைக்கும் நீரை சிக்கனமாக சேமித்து சாகுபடி செய்ய டீசல் எஞ்ஜின்களுடன் கூடிய 700 மழை தூவுவான் மற்றும் நகரும் தெளிப்பு நீர்ப்பாசன அமைப்புகள், அதாவது Rain gun and Mobile Sprinklers வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படும். இவை 57 கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்டு, 350 வட்டாரங்களில், வட்டாரத்திற்கு இரண்டு என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

குறைந்துவரும் சாகுபடிப்பரப்பினால், உணவு உற்பத்தி பாதிக்கப்படும் சூழ்நிலையை தீவிரமாக ஆராய்ந்த எனது தலைமையிலான அரசு, நடப்பாண்டில் 12,500 ஏக்கர் பரப்பிலுள்ள தரிசு நிலங்களை சீர்திருத்தி உரிய நீராதார அமைப்புகளையும் உருவாக்கும் வகையில், ஏக்கருக்கு 4,000 ரூபாய் பின்னேற்பு மானியமாகவும், உரிய முக்கிய இடுபொருட்களை மானிய விலையில் வழங்கி சாகுபடி பணிகளை மேற்கொள்ள ஒட்டுமொத்தமாக 7 கோடியே 20 லட்சம் ரூபாயினையும் வழங்கும்.

உணவு தானிய உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு நிலையினை விரைந்து அடைய ஏதுவாக, உற்பத்தி இடைவெளியினை குறைக்கும் முன்னோடி திட்டங்களை ஒருங்கிணைத்து விவசாயிகள், விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்கள் ஒன்றுகூடி விவசாயிகள் அளவிலான பயிர்த்திட்டம் தயாரிக்கப்படும். இதன் தொடர்ச்சியாக கிராம, வட்டார, மாவட்ட அளவில் நெல், சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகளுக்கான 3 வகையான விரைவு திட்டங்கள் மூலம் நடப்பாண்டில் உணவு தானிய உற்பத்தியினை பெருக்க ‘‘விரைவுத் திட்ட அணுகுமுறை’’ செயல்படுத்தப்படும். இத்திட்ட அணுகுமுறையினை மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் சிறப்புடன் செயல்படுத்த திட்டநிதியாக 114 கோடியே 20 லட்சம் ரூபாய் வழங்கப்படும்.

ஊட்டச் சத்துக்கள் பாதுகாப்பிற்கு, குறிப்பாக புரதச்சத்து தேவையினை ஈடுசெய்யும் வகையில், துவரை உற்பத்தி திறனை ‘‘துவரை நடவு செய்தல்’’ தொழில் நுட்பம் மூலம் அதிகரிக்கவும், இதற்காக 50,000 ஏக்கர் பரப்பில் துவரை நடவினை மேற்கொள்ளவும், இதில் 10,000 ஏக்கர் நடவு துவரைக்கு சொட்டு நீர்ப்பாசனம் அளிக்கவும் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதனைச் செயல்படுத்த 55 கோடியே 60 லட்சம் ரூபாய் வழங்கப்படும்.

கரும்பு உற்பத்தி திறனை அதிகரிக்கும் வகையில், நீடித்த நிலையான கரும்பு உற்பத்தி திட்டம் 50,000 ஏக்கர் பரப்பளவில் 275 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் சர்க்கரை ஆலைகள் மூலம் செயல்படுத்தப்படும்.

வேளாண் மற்றும் தோட்டக் கலைத் துறை திட்டங்களுக்கான தரமான இடுபொருட்கள் உரிய தருணத்தில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், ‘‘சிறப்பு நோக்க அமைப்பு’’, அதாவது Special Purpose Vehicle ஒன்று தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை ஆணையரகத்தில் ஏற்படுத்தப்படும். இதற்காக 1 கோடி ரூபாய் சமபங்கு தொகையும், வட்டியில்லா சுழல்நிதியாக 100 கோடி ரூபாயும், இதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த 11 கோடியே 49 லட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 112 கோடியே 49 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

வேளாண் தொழிலில் தொடர்ந்து வருமானம் இல்லாததன் காரணமாக வேளாண் அல்லாத பிறபணிகளுக்கு கிராமப்புற மக்கள் செல்வதால் சாகுபடி பணிகளை குறித்த காலத்தே மேற்கொள்ள இயலாத சூழ்நிலை நிலவுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, வேளாண்மையை எந்திரமயமாக்கவும், கிராமப்புற இளைஞர்கள் மூலம் வேளாண் தொழில் தொடர்ந்து நடைபெறுவதற்குத் தேவையான அனைத்து திட்டங்களையும் எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக நடப்பாண்டிலும் 124 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவில் விவசாயிகளுக்கு பண்ணை இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கப்படும்.

விவசாயிகளுக்கு அதிக லாபம் தரும் தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்ய, அது குறித்த தொழில்நுட்பங்களை பயிற்றுவிக்கவும், தரமான இடுபொருட்கள் வழங்கி அத்துடன் தரமான விரிவாக்க சேவை வழங்கவும் 28 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் 50 வட்டாரங்களில் ‘‘விவசாயிகள் சேவை மையம்’’ ஏற்படுத்தவும், 5 “மாவட்ட தோட்டக்கலை தொழில்நுட்ப ஆதார மையங்கள்’’ ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தோட்டக்கலை விளைபொருட்களின் உற்பத்தி பெருகவும், தோட்டக்கலை விவசாயிகட்கு நல்லவிலை கிடைக்கச் செய்யவும், தரமான விதை அல்லது நடவுக்கன்றுகள் வழங்குவதோடு விளை பொருட்களை “அச்சு மற்றும் ஆரம்” அதாவது, Hub and Spoke model அமைப்பில், 50 சேகரிப்பு மையங்களில் சேகரித்து சுத்தப்படுத்துதல், தரம்பிரிப்பு, வகைப்படுத்துதல், சிப்பம் கட்டுதல், 10 முன்னோடி சந்தைகளில் உள்ள மொத்த வியாபாரிகளுக்கு மின்னணு ஏல முறையில் விற்பனை இணைப்பு ஏற்படுத்தி தருதல், குளிர்பதன சேமிப்பு, ஏலமிடும் அறை, மதிப்புக் கூட்டுதல் உள்ளிட்ட வசதிகளையும் செயல்படுத்த 186 கோடியே 46 லட்சம் ரூபாய் வழங்கப்படும்.

தென்னை விவசாயிகளின் நலன் காக்கும் வகையில், கோவை மாவட்டத்தில் இளநீருக்கான சிறப்பு வணிக வளாகம் ஒன்றும், வாழை விவசாயிகளுக்கென திருநெல்வேலி மாவட்டத்தில் வாழைக்கான சிறப்பு வணிக வளாகம் ஒன்றும், பத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு அணுகுசாலை வசதிகளும், தேனி மாவட்டம் போடி நாயக்கனூர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பகுதிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும், 23 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் அமைத்து தரப்படும்.

ஆக மொத்தம் 984 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பில் இன்று அறிவிக்கப்பட்டுள்ள இந்த திட்டங்கள், வேளாண் உற்பத்தி அதிகரிக்கவும், வேளாண் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******